செ.வெ.எண்-01 நாள்-02.01.2018

**அரியலூர் மாவட்டத்தில் அம்மா திட்டம் வருவாய்துறை முகாம்கள் 05.01.2018 அன்று நடைபெறுகிறது.**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

அரியலூர் மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் ஐந்தாம் கட்டமாக இரண்டு கிராமங்கள் - **உடையார்பாளையம் மற்றும் அரியலூர் வட்டங்களில்** வட்டத்திற்கு இரண்டு கிராமத்திலும், **செந்துறை** மற்றும் **ஆண்டிமடம்** வட்டத்தில் ஒரு கிராமத்திலும் அம்மா திட்ட முகாம் 05.01.2018 அன்று வருவாய் வட்டாட்சியர்கள் தலைமையில் பின்வருமாறு நடைபெற உள்ளது.

**அரியலூர் வட்டத்தில்** மஞ்சமேடு, கோவிலூர் ஆகிய கிராமங்களிலும், **உடையார்பாளையம் வட்டத்தில்** கீழநத்தம், ஆமணக்கந்தோண்டி ஆகிய கிராமங்களிலும், **ஆண்டிமடம் வட்டத்தில்** கூவத்தூர் (வ) கிராமத்திலும், **செந்துறை வட்டத்தில்** ஆதனக்குறிச்சி கிராமத்திலும் நடைபெறுகிறது.

இம்முகாமில் வருவாய்த்துறையின் சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள், பட்டா மாறுதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ் ஆகியவற்றில் தகுதி பெற்ற மனுக்களின் மீது உடனடியாக தீர்வு வழங்கப்படும்.

பொதுமக்கள் இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி, பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**